# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ம் நாள் செவ்வாய்கிழமை

## *இ.ம.எண். 110/2020 In அசல் வழக்கு எண்: 71/2014*

ஷாகின்ஷா காஜா மொய்தீன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நிர்வாக அதிகாரி
   லால்கான் பள்ளிவாசல் சிதம்பரம்
2. முகமது ஜியாவுதீன்
3. முகமது உசைன்
4. முகமது அலி
5. ஜவகர்
6. ஜமால் உசைன்
7. ஜாஹீர் உசைன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

8. தமிழ்நாடு அரசு கடலூர்
   மாவட்ட ஆட்சியர் மூலமாக
9. கோட்டாடசியர், சிதம்பரம்
10 வட்டாட்சியர், சிதம்பரம்
11. ராஜா முகம்மது குத்புதீன்
12. தமிமுன் அன்சாரி
13. நவாப் ஷாகுல் ஹமீது
14. சிறப்பு வட்டாட்சியர்
    டவுன் சர்வெ செட்டில்மென்டு அலுவலகம்
    சிதம்பரம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 02.03.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1, 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், 8,9,10,14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.கே.செல்வக்குமார், அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுவில் கண்ட 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக் கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் தாக்கல் செய்த மனு.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் என்றும், 8 முதல் 14 எதிர்மனுதாரர்கள் புதிய தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்றும், இந்த 1 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தான் வழக்கு சொத்து மைனர் இனாம் சொத்து ஆகும் என்றும் 1963 Tamil Nadu Minor Inam ( Abolition and conversation) Act ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை முடிவுற்று கடலூர் சார் நீதிமன்றம் IAT No. 137/78 உத்தரவின்படி வழக்கிடை சொத்து அடிமனை மற்றும் கட்டிடம் எம்.ஏ.காதருக்கு பாத்தியம் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் அவருக்கு பட்டா பெற உரிமை உள்ளது என்றும் தீர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் தன்னுடைய தந்தை இறந்த பிறகு தனக்கும் இதர வாரிசுகளாக 11 முதல் 13 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது என்றும் தான் இதர வாரிசுகளுக்கும் சேர்த்து அனுபவித்து வருவதாகவும், தான் அதில் பாத்திமா மெட்ரிகுலேஷன் பள்ளி நடத்தி வருவதாகவும், இந்நிலையில் எவ்வித உரிமையும் இல்லா பள்ளிவாசல் தாரர்கள் (1ம் எதிர்மனுதாரர்) தன்னுடைய அமைதியான சுவாதீனத்தையும் அனுபவத்தையும் இடையூறு செய்து வந்ததால் அவருக்கும் மற்றும் 2 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்க கோரி இவ்வழக்கு தொடுக்கப்பட்டு நடப்பில் இருந்து வருவதாகவும், இது தவிர தான் கடலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பலர் மீதும் தனக்கும் 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் பட்டா வழங்க கோரி செயலுறுத்துக்கட்டளைக்கு சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 114-2014ல் வழக்கு தொடுக்கப்பட்டு நடப்பில் இருந்து கொண்டு இருக்கிறது என்றும் இந்நிலையில் 2 வழக்குகளிலும் முரண்பாடுகள் உடைய தீர்ப்பாணைகளை தவிர்க்கும் பொருட்டு அதற்கு ஏதுவாக இவ்வழக்கின் விசாரணையை தடை செய்ய கோரி மனு கொடுக்கப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், எம்.ஏ காதர் அவர்கள் இதர வாரிசுதாரர்கள் மற்றும் பட்டா வழங்க வேண்டி அதிகாரிகளை அதாவது இந்த 8 முதல் 14 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினராகளாக சேர்க்க விடுபட்டு விட்டது தற்போதுதான் தனக்கு தெரிய வந்ததாகவும், மேற்படி 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்கள் முன்னிலையில் இவ்வழக்கினை நடத்தினால்தான் முழுமையாகவும்

முடிவாகவும் தீர்வு காண முடியும் என்றும் இருவழக்குகளிலும் தீர்வாக வேண்டிய பிரச்சினைகள் ஒன்றுதான் என்றும், மேலே கண்டபடி இருவழக்குகளிலும் முரண்பாடுடைய இரு வெவ்வேறு தீர்ப்பாணைகளை தவிர்க்கும் பொருட்டு இந்த 8 முதல் 14 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாகவும் எதிர்வாதிகளாகவும் சேர்க்க வேண்டியது அவசியமாகும் என்றும் இவர்கள் முக்கியமான தரப்பினர்கள் என்றும், இவர்களை தரப்பினர்களாக சேர்க்க தான் அறிவுறுத்தப்பட்டதாகவும், இல்லாவிடில் தனக்கு சொத்து இழப்பு பணவிரயம் உள்ளிட்ட ஈடு செய்ய முடியாத இழப்பு நேரிடும் என்றும், எனவே 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக் கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1, 5 முதல் 7 வரையான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், இந்த வழக்கு Occupancy right-ஐ விளம்புகை செய்ய வேண்டியும் உறுத்துக்கட்டளை வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கின் விசாரணைக்கு தேவையற்ற நபர்கள் என்றும், 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு தேவையான அவசியமான நபர்கள் இல்லை என்றும், அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், வழக்கு 2016 ல் தாக்கல் செய்யப்பட்டு நீண்ட காலமாக வழக்கை நடத்தாமல் மனுக்களை ஒன்றன் பின் ஒன்றாக தாக்கல் செய்து வாதி காலம் கடத்தி வருகிறார் என்றம் அவ்வாறு காலம் கடத்தவே மேற்கண்ட 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என இம்மனு கொடுத்துள்ளார் என்றும், 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்கள் பேரில் எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்றும் எனவே அவர்கள் வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்றும் எனவே மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

**<u>4. 8, 9, 10, 14 வரையான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மெமோவின் சுருக்கம்:</u>**

வழக்கு சொத்து மைனர் இனாம் சொத்து என்றும் இது சம்மந்தமான வழக்கு கடலூர் சார் நீதிமன்றத்தில் நடந்தது என்றும் இதில் 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமானது என்றும் இதில் பாத்தீமா மெட்ரிகுலேஷன் பள்ளி நடத்தி வருகிறார் என்றும் பள்ளிவாசலுக்கு உரிமை இல்லை என்றும் நிரூபிக்க

வேண்டிய பொறுப்பு இந்த மனுதாரரை சாரும் என்றும், இத்துடன் கூடுதல் மாவட்ட உரிமை கோர்ட்டில் அசல் வழக்கு 114-2014 தொடர்புடையது என்றும் அதை நிருபிக்கும் பொறுப்பு மனுதாரரைச் சாரும் என்றும் இந்த 8 முதல் 14 எதிர்மனுதாரர்க்ள இந்த வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்றும் மனுவை தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

5. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

7. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதைதவிர மனுதாரர் கடலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பலர் மீதும் மனுதாரருக்கும் 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் பட்டா வழங்க கோரி செயலுறுத்துக்கட்டளைக்கு சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 114-2014ல் வழக்கு தொடுக்கப்பட்டு நடப்பில் இருந்து கொண்டு இருக்கிறது என்றும் எம்.ஏ காதர் அவர்கள் இதர வாரிசுதாரர்கள் மற்றும் பட்டா வழங்க வேண்டி அதிகாரிகளை அதாவது இந்த 8 முதல் 14 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினராகளாக சேர்க்க விடுபட்டு விட்டது தற்போதுதான் மனுதாரருக்கு தெரிய வந்ததாகவும், மேற்படி 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தாலும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் பட்டா வழங்க கோரி செயலுறுத்துக்கட்டளைக்கு சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 114-2014ல் வழக்கு தொடுக்கப்பட்டு நடப்பில் இருந்து கொண்டு இருக்கிறது என்றும் எம்.ஏ காதர் அவர்கள் இதர வாரிசுதாரர்கள் மற்றும் பட்டா வழங்க வேண்டி அதிகாரிகளை அதாவது இந்த 8 முதல் 14 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினராகளாக சேர்க்க விடுபட்டு விட்டது தற்போதுதான் மனுதாரருக்கு தெரிய வந்ததாகவும் எனவே 8 முதல் 14 எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுதாரர் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கும் பட்டா வழங்க கோரி மற்றொரு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது இவர்களை இந்த அசல் வழக்கில் சேர்க்கப்பட

வேண்டியது அவசியமான ஒன்றாகும். தாவா சொத்தில் சம்மந்தப்பட்ட நபர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கை மேல் நடத்தினால் பல்வேறு வழக்குகள் எழுவதை தடுக்க முடியும். எனவே, தாவா சொத்தின் 8 முதல் 14 வரையான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்துவதில் எதிர்மனுதாரருக்கு எந்தவிதமாக பாதிப்பும் இருக்காது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 08.03.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.